**சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08**

ந.க.எண். 3046 /ஆ4/2023 நாள். 18.04.2023

பொருள் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் - 2023 -24 ஆம் கல்வியாண்டில் அனைத்துச் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு நுழைவு நிலை வகுப்பில் (LGK/I Std) குறைந்தபட்சம் 25% இட ஒதுக்கீடு வழங்குதல் - சேர்க்கை நடைமுறைகள் அறிவுரை வழங்கியமை - நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்புதல் - சார்பாக.

பார்வை

1. சென்னை-06, தமிழ்நாடு தனியார் பள்ளிகள் இயக்குநர் மற்றும் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், மாநில முதன்மைத் தொடர்பு அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 3605/இ1/2023, நாள்.17.04.2023
2. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் தமிழ்நாடு விதிகள், 2009 மற்றும் தமிழ்நாடு விதிகள் 2011
3. அரசாணை(நிலை)எண் 271, பள்ளிக் கல்வித் துறை (சி2) நாள். 25.10.2012
4. அரசாணை (நிலை) எண் 60, பள்ளிக் கல்வித் (எக்ஸ்2) துறை, நாள்.01.04.2013
5. அரசாணை (நிலை) எண் 59, பள்ளிக் கல்வித் (பொநூ2) துறை நாள் 12.05.2014
6. அரசாணை (நிலை) எண் 66, பள்ளிக் கல்வித் (பொநூ2) துறை, நாள். 07.04.2017

..................

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 பிரிவு 12(1) (c) இன்படி அனைத்து சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு நுழைவு நிலை வகுப்பில் (LKG/I std) குறைந்தபட்சம் 25% இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்.

இதனை நடைமுறைப்படுத்துவதற்கு பார்வையில் உள்ள அரசாணைகளில் விரிவான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன. அவ்வழிகாட்டுதல்களைப் பின்பற்றி 2013-14 முதல் 2022-23 ஆம் கல்வியாண்டு வரை மாணாக்கர் சேர்க்கை செய்யப்பட்டு பயனடைந்துள்ளனர். சட்டத்தின் நோக்கம் முழுமையாக நிறைவேறும் விதமாக வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் அதிக அளவில் பயன் பெறும் வகையில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யும் பொருட்டு பார்வை 5-ல் உள்ள அரசாணையில் கூடுதல் வழிகாட்டுதலும் திருத்திய கால அட்டவணையும் வழங்கப்பட்டுள்ளது.

பார்வையில் கண்ட அரசாணைகளின்படி 2023-24 ஆம் கல்வியாண்டில் 25% இட ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை நடைமுறைகள் சார்ந்து கீழ்க்கண்டவாறு அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

| | |
|---|---|
| **சேர்க்கைக்கு தகுதியான இடங்களை (Intake) பள்ளியின் தகவல் பலகையில் பொதுமக்கள் அறியும் வகையில் அறிவிப்பு வெளியிட வேண்டிய நாள்** | 18.04.2023 |
| **சேர்க்கைக்கான விண்ணப்பங்களை இணைய வழியில் விண்ணப்பிக்க தயார் நிலையில் இருக்க வேண்டிய நாள்** | 19.04.2023 |
| **சேர்க்கைக்கு விண்ணப்பிக்கப்பட வேண்டிய நாட்கள்** | 20.04.2023 முதல் 18.05.2023 வரை |
| **6"x10" அடி அளவில் அறிவிப்பு பலகை பள்ளி நுழைவு வாயில் வைத்தல்** | 19.04.2023 |

1. சட்டப்பிரிவு 12(1) (சி) இன்கீழ் சேர்க்கை வழங்க தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள் 2011, விதி எண் 4(1) இன்படி எல்.கே.ஜி அல்லது முதல் வகுப்பிற்கு அருகாமையிடம் என்பது 1 கிலோ மீட்டர் ஆகும்.

2. RTE 25% இட ஒதுக்கீட்டிற்கான சேர்க்கைக்கு தகுதியான இடங்களின் எண்ணிக்கை. 2022-23 ஆம் கல்வியாண்டில் நுழைவு நிலை வகுப்பில் EMIS இணையதளத்தின்படி உள்ள மாணாக்கர்களின் எண்ணிக்கையில் 25% கணக்கிட்டு சம்பந்தப்பட்ட பள்ளியின் EMIS Login -ல் 18.04.2023 அன்று வெளியிடப்படும். சார்ந்த பள்ளியின் முதல்வர் பள்ளிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இடங்களை அன்றைய தினமே 12 (1) (சி) இன் கீழ் 25% சேர்க்கைக்கான தகுதியான இடங்களை (intake) பள்ளியின் தகவல் பலகையில் பொதுமக்கள் அறியும் வகையில் அறிவிப்பு வெளியிட வேண்டும். 18.04.2023 அன்றே பள்ளி வாரியான தகுதியான இடங்களின் எண்ணிக்கை இணையதளத்திலும் வெளியிடப்படும்.

3. சட்டப்பிரிவு 12(1) (சி) இல் சேர்க்கை கோரும் குழந்தைகளின் பெற்றோர்கள் rte.tnschools.gov.in என்ற இணையதளத்தில் 20.04.2023 முதல் 18.05.2023 வரை எங்கிருந்து வேண்டுமானாலும் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம்.

4. அந்தந்த பள்ளிகளில் விண்ணப்பங்கள் ஏதேனும் பெறப்பட்டால் சார்ந்த பெற்றோர்களுக்கு ஒப்புகை சீட்டு (அரசாணை (நிலை) எண் 60 பள்ளிக் கல்வித் துறை நாள் 01.04.2013 இல் உள்ள ஒப்புகைச் சீட்டில் )உடன் தவறாது வழங்கப்பட வேண்டும். இவ்விண்ணப்பங்களை பள்ளியிலேயே இணைய வழியில் பதிவேற்றம் செய்யலாம் அல்லது அருகில் உள்ள முதன்மைக் கல்வி அலுவலர்/ மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார்பள்ளிகள்/ இடைநிலை/ தொடக்கக் கல்வி /வட்டாரக் கல்வி அலுவலர்/ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வட்டார வள மையம் ஆகிய அலுவலகங்களில்பெற்று இணைய வழியில் பதிவேற்றம் செய்திட தயார் நிலையில் இருத்தல் வேண்டும்.

5. RTE 25% இட ஒதுக்கீட்டின் கீழ் மாணாக்கர்கள் சேர்க்கை செய்யப்படும் பள்ளிகள் முறையாக அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும்.

6. தமிழ்நாடு பள்ளிகள் (கட்டண வசூல் ஒழுங்குமுறை) சட்டம் 2009 ன்படி தனியார் பள்ளிகள், தனியார் பள்ளிகள் கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்படும் கட்டணத்தை EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

7. தனியார் பள்ளிகள் (ஒழுங்கு முறை) விதிகள் 2023-ல் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் 8 மற்றும் 38-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி போதிய உட்கட்டமைப்பு வசதிகள் பெற்றிருக்க வேண்டும்

2023-2024 ஆம் ஆண்டிற்கான 25% இட ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை நடைமுறைகள் மேற்கொண்டு வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் பயனடையும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து சிறுபான்மையற்ற தனியார் பள்ளிகளின் முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்..

முதன்மைக்கல்வி அலுவலர்
சென்னை

பெறுநர்

அனைத்து சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளி முதல்வர்கள் (மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகள் / மழலையர் மற்றும் துவக்கப் பள்ளிகள் )
சென்னை மாவட்டம்